A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
– Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை:திரு. செ. தேவராஜன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 18 / 2021**

திரு. ஆர். துரைசாமி,
த/பெ. ராமசாமி,
ஆர் புதுப்பாளையம்,
ராமதேவம் கிராமம் & அஞ்சல்,
பரமத்தி வேலூர் வட்டம், நாமக்கல் மாவட்டம்.

. . . . மேல்முறையீட்டாளர்
(திரு. ஆர். துரைசாமி & திரு. G. தேவராஜன்)

எதிர்

செயற்பொறியாளர்/பரமத்தி வேலூர்,
நாமக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பழைய பைபாஸ் ரோடு, அபிராமி தியேட்டர் அருகில்,
பரமத்தி வேலூர் – 638 182.

. . . எதிர்மனுதாரர்
(திரு. I. ராணி, செயற்பொறியாளர்/பரமத்தி வேலூர்)

**மனு பெறப்பட்ட நாள்: 15–02–2021**

**கேட்புரை நாள்: 08–04–2021**

**ஆணை நாள் : 29–07–2021**

15.02.2021 அன்று பெறப்பட்ட திரு. ஆர். துரைசாமி, த/பெ. ராமசாமி, ஆர் புதுப்பாளையம், ராமதேவம் கிராமம் & அஞ்சல், பரமத்தி வேலூர் வட்டம், நாமக்கல் மாவட்டம் அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 18/2021 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 08.04.2021 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**<u>ஆணை</u>**

**1. <u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:</u>**

மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பு எண் 234–002–259–இல் வேறு யாருடைய பெயரையும் கூட்டு உரிமையாளராக சேர்க்கக் கூடாது என்று விண்ணப்பித்துள்ளார்.

**2.0 <u>வழக்கின் சுருக்கம்:</u>**

2.1 மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பு எண் 234–002–259–இல் வேறு யாருடைய பெயரையும் கூட்டு உரிமையாளராக சேர்க்கக் கூடாது என்று எதிர்மனுதாரரிடம் விண்ணப்பித்துள்ளார்.

2.2 திரு. காளியண்ணன் கவுண்டர் தனக்கு சொந்தமான நிலத்தையும் மற்றும் மின் இணைப்பையும் சரிபாதி உரிமையை கிரயம் செய்து கொடுத்ததாக திரு துரைசாமி பெயர் மாற்றம் வேண்டி ஆவணங்கள் கொடுத்ததின் அடிப்படையில் கூட்டு உரிமையாளராக திரு.சின்னுசாமியின் ஒப்புதல் கடிதம் கொடுத்ததின் காரணமாக மின் இணைப்பு திரு.துரைசாமி பெயருக்கு மாற்றப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 பிறகு திரு.சின்னுசாமி தனது பெயரையும் மின் இணைப்பில் சேர்க்க வேண்டி ஆவணங்கள் கொடுத்ததின் அடிப்படையில் மின் இணைப்பில் திரு சின்னுசாமி பெயரை சேர்க்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எனவே தன்னுடைய மின் இணைப்பு எண்ணில் யாருடைய பெயரையும் சேர்க்கக் கூடாது என்று மேல்முறையீட்டாளர் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், நாமக்கல் மின்பகிர்மான வட்டத்தை 17.11.2020 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், நாமக்கல் மின்பகிர்மான வட்டம் 12.01.2021 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

## 3.0 <u>மன்றத்தின் தீர்வு</u> –

நாமக்கல் மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 12.01.2021 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"<u>மன்றத்தின் தீர்வு:</u>*

*ராமதேவம் கிராம சர்வே எண்:423/2Aல் உள்ள நிலம், கிணறு மற்றும் மின் இணைப்பு எண். **234–002–259** ஆகியவை திரு.துரைசாமி மற்றும் திரு.எஸ்.எம். சின்னுசாமி, ஆகிய இருவருக்கும் சொந்தமானது என வருவாய் ஆவணங்கள் மூலம் தெரிய வந்ததின் அடிப்படையில் திரு. S.M. சின்னுசாமி அவர்கள் பெயரையும் மின் இணைப்பு எண். **234–002–259** இல் சேர்க்க **22.09.2020** அன்று இம்மன்றத்தால் வழங்கப்பட்ட ஆணையின் படி செயற்பொறியாளர் /இப/ப.வேலூர் அவர்களால் பெயர் மாற்றம் வழங்குமாறு உத்திரவு வழங்கப்பட்டது. தற்போது தாங்கள் சமர்ப்பித்த ஆவணங்களை சரிபார்த்ததில் மேற்படி கிணறு மற்றும் மின் இணைப்பு **(234–002–259)** ஆகியவை தங்ளுக்கு மட்டுமே முழுஉரிமை என்பதற்கான ஆவணங்கள் இல்லாததால் தங்களின் கோரிக்கை ஏற்க இயலாது. எனவே **22.09.2020** அன்று வழங்கப்பட்ட ஆணையே சரியனது என இம்மன்றத்தால் முடித்து வைக்கப்படுகிறது."*

## 4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:</u>

**4.1** மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 08.04.2021 அன்று காணொளி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

**4.2** மேல்முறையீட்டாளர் திரு. ஆர். துரைசாமி மற்றும் திரு. G. தேவராஜன் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

**4.3** எதிர்மனுதாரர் திரு. I. ராணி, செயற்பொறியாளர்/பரமத்தி வேலூர், நாமக்கல் மின்பகிர்மான வட்டம் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

**4.4** மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின் குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்மந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்

மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

**5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்:</u>**

5.1 ராமதேவம் கிராமம் ஆர்.புதுப்பாளையத்தில் வசிக்கும் ராமசாமி மகன் ஆர்.துரைசாமி ஆகிய நான், ராமதேவம் கிராமம் சர்வே எண். 423/2ஏ–ல் மொத்த பரப்பளவு 2 ஏக்கர் 15 சென்ட் நிலத்தையும், அந்நிலத்திலுள்ள கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள மின் இணைப்பு எண்: 234–002–259 மற்றும் அதற்கு சம்பந்தப்பட்ட 5 HP மின் மோட்டார் பம்ப் செட் ஆகியவற்றுடன் புள்ளியண்ணகவுண்டர் மகன் காளியண்ணன் என்பவரிடமிருந்து ஆவண எண்: 521/07 ன்படி கிரயம் பெற்றதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 மின் வாரியம், 12.02.1999 ம் தேதியில் புள்ளியண்ணகவுண்டர் மகன் காளியண்ணன் பெயரில் மின் இணைப்பு எண்: 234–002–259 வழங்கியதாகவும் இம்மின் இணைப்பு பெறப்படும் போது இந்த கிணற்றின் பங்குதாரர் புள்ளியண்ணகவுண்டர் மகன் ரங்கசாமி என்பவர் அவரது தம்பி புள்ளியண்ணகவுண்டர் மகன் காளியண்ணன் என்பவருக்கு மோட்டார் மின் இணைப்பு வழங்க ஆட்சேபனை இல்லை என்று எழுதி கையொப்பம் இட்டு கொடுத்துள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 அதனை ஏற்று மின் வாரியம் 12.02.1999ம் தேதியில் புள்ளியண்ணகவுண்டர் மகன் காளியண்ணன் பெயரில் மின் இணைப்பு எண்: 234–002–259 வழங்கியதாகவும், எனவே அப்போதிருந்தே இந்த மின் இணைப்பு புள்ளியண்ணகவுண்டர் மகன் காளியண்ணன் என்பவருக்கு மட்டுமே சொந்தமானதாக இருந்து வந்ததாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 மேலும், மின்வாரிய அலுவலகப் பதிவேட்டில் இந்த மின் இணைப்பு புள்ளியண்ணகவுண்டர் மகன் காளியண்ணனுக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்ற விவரம் பதியப்பட்டுள்ளது என்றும், இந்நிலையில், புள்ளியண்ணகவுண்டர் மகன் ரங்கசாமி அவருக்கு பாத்தியப்பட்ட நிலமான சர்வே எண். 423/2ஏ வில் உள்ள நிலத்தை ராமதேவம் கிராமம் ஆர்.புதுப்பாளையத்தைச் சேர்ந்த எஸ்.எம்.சின்னுசாமி என்பவருக்கு, நல்லூர் சார்–பதிவாளர் அலுவலக ஆவண எண்: 20/02 ன் படி கிரயம் செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த கிரயப்பத்திரத்தில் புள்ளியண்ணகவுண்டர் மகன் காளியண்ணனுக்கு மட்டுமே சொந்தமான மின் இணைப்பு எண்: 234–002–259 மற்றும் 5 HP மின்மோட்டார் பம்ப்செட்டில் சரிபாதி

என்று அவர்களாகவே பத்திரத்தில் சேர்த்து எழுதி நல்லூர் சார்–பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொண்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 பின்னர், புள்ளியண்ணகவுண்டர் மகன் காளியண்ணனுக்கு பாத்தியப்பட்ட 2 ஏக்கர் 15 சென்ட் நிலத்தையும், அதில் உள்ள கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள மின் இணைப்பு எண்: 234–002–259 மற்றும் 5 HP மின்மோட்டார் பம்ப்செட் ஆகியவற்றுடன் 26.02.2007–ல் தனது பெயருக்கு பரமத்தி சார்–பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண் : 521/2007 ன்படி கிரயம் செய்து கொண்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 மேலும், ராமதேவ கிராம நிர்வாக அலுவலர் முன்னிலையில் புள்ளிண்ணகவுண்டர் மகன் காளியண்ணன் அவர் பெயரில் இருந்த மின் இணைப்பு எண் 234–002–259 மற்றும் 5 HP மின்மோட்டார் பம்ப்செட் ஆகியவற்றுடன் மேற்படி நிலம் மற்றும் கிணறு ஆகியவற்றை ராமசாமி மகன் துரைசாமி என்பவருக்கு சுத்த கிரயத்திற்கு விற்று விட்டதால் மேற்படி மின் இணைப்பை ராமசாமி மகன் துரைசாமி பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய எந்தவித ஆட்சேபணையும் இல்லை என்று முழு சம்மதத்தினை 25.05.2015 அன்று தெரிவித்துள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 மேலும், 2015–ம் ஆண்டு மின் வாரிய அலுவலகத்தில் உரிய ஆவணங்கள் சமர்ப்பித்ததால் மேற்படி மின் இணைப்பு தன் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாகவும், தற்போது மேற்படி மின் இணைப்பு முழுவதும் தன் பெயரில் உள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். இந்நிலையில் மின் இணைப்பு எண் 234–002–259ல் திரு.எஸ்.எம்.சின்னுசாமி என்பவரது பெயரை சேர்க்க வேண்டும் என்று நாமக்கல் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் 22.09.2020ல் ஆணை பிறப்பித்ததாகவும் இதனை எதிர்த்து 21.10.2020 ந் தேதியில் நாமக்கல் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் தான் மேல்முறையீடு செய்ததாகவும் அதனை விசாரித்த நாமக்கல் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தனது ஆவணங்களை தீர ஆராயாமல் 22.09.2020 ஆணை பிறப்பித்துள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 எனவே, மேற்கூறிய தனது ஆவணங்களை தீர ஆராய்ந்து மின் இணைப்பு எண் 234–002–259ல் வேறு யாருடைய பெயரையும் கூட்டு உரிமையாளராக சேர்க்கக் கூடாது என்று மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## 6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்:</u>

6.1 இராமதேவம் கிராமம் ஆர்.புதுபாளையத்தில் வசிக்கும் ராமசாமி மகன் ஆர். துரைசாமி அவர்கள் ராமதேவம் கிராமம், சர்வே எண்.423/2ஏ–ல் உள்ள 2 ஏக்கர் 15 சென்ட் நிலத்தையும் அதிலுள்ள கிணறு மற்றும் விவசாய மின் இணைப்பு எண்.234–002–259 மற்றும் அதற்கு சம்மந்தப்பட்ட 5 HP மின்மோட்டார் பம்ப் செட் ஆகியவற்றில் பாதி புள்ளியன்ன கவுண்டர் மகன் காளியண்ணன் என்பவரிடமிருந்து ஆவண எண்.521/07–ஆக பரமத்தி சார்பதிவாளர் அலுவலகத்தில் 26.02.2007–ம் தேதியன்று பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரத்தின்படி கிரயம் பெற்றது உண்மைதான் என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 மின்வாரியம் 12.02.1999–ம் தேதியில் புள்ளியன்ன கவுண்டர் மகன் காளியண்ணன் என்பவர் பெயரில் மின் இணைப்பு எண்.234–002–259 வழங்கியது. இம்மின் இணைப்பு பெறப்படும் போதே இந்த கிணற்றின் பங்குதாரர் புள்ளியன்ன கவுண்டர் மகன் ரங்கசாமி என்பவர் அவரது தம்பி காளியண்ணன் என்பவருக்கு மோட்டார் மின் இணைப்பு வழங்க ஆட்சேபனை இல்லை என்று எழுதி கையொப்பமிட்டு கொடுத்தார் என்பது உண்மை என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 அதனை ஏற்று மின் வாரியம் 12.02.1999 அன்று புள்ளியன்ன கவுண்டர் மகன் காளியண்ணன் என்பவர் பெயரில் மின் இணைப்பு எண்.234–002–259 வழங்கியது. மேலும் அப்போது புள்ளியன்ன கவுண்டர் மகன் காளியண்ணனுக்கு மட்டுமே சொந்தமாக இருந்து வந்தது என்பதும் உண்மை என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 இந்நிலையில் புள்ளியன்ன கவுண்டர் மகன் ரங்கசாமி அவருக்கு பாத்தியப்பட்ட இராமதேவம் கிராமம் சர்வே எண்.423/2 ஏ–ல் உள்ள நிலம் மற்றும் அதில் உள்ள கிணற்றில் பாதிபாகத்தை ராமதேவம் கிராமம் ஆர்.புதுப்பாளையத்தை சேர்ந்த S.M. சின்னுசாமி என்பவருக்கு 13.03.2002–ல் நல்லூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் கிரையம் செய்து கொடுத்துள்ளார். பிறகு புள்ளியண்ணகவுண்டர் மகன் காளியண்ணன் தனக்கு மட்டுமே சொந்தமான மின் இணைப்பு எண்.234–002–259 மற்றும் 5 HP மின்மோட்டார் பம்ப்செட்டில் சரிபாதி என்று S.M. சின்னுசாமி என்பவருக்கு நல்லூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் கிரையம் பதிவு செய்யப்பட்டுள்ளதும் உண்மைதான் என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**6.5** இராமதேவம் கிராம நிர்வாக அலுவலர் முன்னிலையில் புள்ளியண்ணகவுண்டர் மகன் காளியண்ணன் அவர் பெயரில் இருந்த மின் இணைப்பு எண்.234–002–259 மற்றும் 5 HP மின்மோட்டார் ஆகியவற்றுடன் மேற்படி நிலம் மற்றும் கிணறு ஆகியவற்றை ராமசாமி மகன் துரைசாமி என்பவருக்கு சுத்த கிரையத்திற்கு விற்று விட்டதால் மேற்படி மின் இணைப்பை ராமசாமி மகன் துரைசாமி பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்று முழு சம்மதத்தினை 25.03.2015 அன்று தெரிவித்துள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**6.6** மனுதாரர் திரு.R. துரைசாமி, த/பெ. ராமசாமி அவர்கள் 2015–ம் ஆண்டு மின்வாரிய அலுவலகத்தில் உரிய ஆவணங்கள் சமர்ப்பித்ததால் மேற்படி மின் இணைப்பு மனுதாரர் பெயருக்கு மேற்படி மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்யப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**6.7** மின்இணைப்பு எண்.234–02–259ல் திரு.எஸ்.எம்.சின்னுசாமி என்பவரின் பெயரை சேர்க்க வேண்டும் என்று நாமக்கல் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் 22.09.2020ல் ஆணை பிறப்பித்தது. இதனை எதிர்த்து 21.10.2020ந் தேதியில் நாமக்கல் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் மனுதாரர் மேல்முறையீடு செய்திருந்தார். அதனை விசாரித்த நாமக்கல் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மனுதாரரின் ஆவணங்களை தீரஆராயாமல் 22.09.2020ல் பிறப்பித்த ஆணையை உறுதி செய்து 12.01.2021ல் ஆணை பிறப்பிதுள்ளது என மனுதாரர் கூறியுள்ளது முற்றிலும் தவறானதாகும் என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**6.8** திரு. S.M. சின்னுசாமி, த/பெ.முத்துசாமி கவுண்டர், R.புதுப்பாளையம், இராமதேவம் கிராமம் அவர்கள் மேற்படி கிராமம் மற்றும் சர்வே எண்ணில் உள்ள மின் இணைப்பு தனக்கும் திரு.துரைசாமி என்பவருக்கும் கூட்டு உரிமை உள்ள நிலையில் திரு.ரா.துரைசாமி பெயருக்கு மட்டும் பெயர் மாற்றம் செய்து கொள்ளலாம் என சம்மதக்கடிதம் தன்னிடம் பெறாத நிலையில் அவராகக் கள்ளக் கையெழுத்திட்டு ஆவணங்களை அளித்து அவருடைய பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக நாமக்கல் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் மனு எண்.17/19–20, நாள்.20.02.2020க்கான விசாரணையில் தெரிவித்தார். அதன் அடிப்படையில் வருவாய் ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு திரு. S.M. சின்னுசாமி, த/பெ முத்துசாமி அவர்களின் பெயரையும் மின் இணைப்பில் கூட்டு உரிமையாளராக சேர்க்குமாறு நாமக்கல்

மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் ஆணை பிறப்பிக்கப்பட்டது என்பதே உண்மையாகும் என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**6.9** பரமத்தி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட அசல் வழக்கு எண்.**169/2015**ற்கு வழங்கப்பட்ட தீர்ப்பில் திரு. S.M. சின்னுசாமி, த/பெ முத்துசாமிகவுண்டர் பெயரை மின் இணைப்பில் இணைக்க வாரிய விதிமுறைகளுக்கு உட்பட்டு இருந்தால் இணைக்கலாம் என தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**6.10** மனுதாரர் திரு.R. துரைசாமி, த/பெ. ராமசாமி, R. புதுப்பாளையம், ராமதேவம் கிராமம் அவர்களுக்கு ராமதேவம் கிராமம், சர்வே எண்.**423**/ஏ–ல் உள்ள மொத்த பரப்பளவு **2** ஏக்கர் **15** சென்ட் நிலத்தையும் அதிலுள்ள கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள விவசாய மின் இணைப்பு எண்.**234–002–259** மற்றும் அதற்கு சம்மந்தப்பட்ட **5** HP மின்மோட்டார் பம்ப் செட் ஆகியவற்றுடன் புள்ளியன்ன கவுண்டர் மகன் காளியண்ணன் என்பவர் ஆவண எண்.**521/07**–ஆக பரமத்தி சார்பதிவாளர் அலுவலகத்தில் **26.02.2007**–ம் தேதியன்று பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரத்தில் மேற்படி மின் இணைப்பு எண் மற்றும் அதற்கு சம்மந்தப்பட்ட **5** HP மின்மோட்டார் ஆகியவற்றில் பொதுவில் பேர்பாதி பாத்தியம் என கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்பது வருவாய் ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**6.11** திரு. S.M. சின்னுசாமி, த/பெ. முத்துசாமிகவுண்டர், R. புதுப்பாளையம், ராமதேவம் கிராமம் அவர்களுக்கு புள்ளியண்ண கவுண்டர் ரங்கசாமி அவர்கள் பரமத்தி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.**20/2002**–ன்படி மேற்படி இராமதேவம் கிராமம், சர்வே எண்.**432/2**A-ல் உள்ள திறந்தவெளி கிணற்றில் பெறப்பட்டுள்ள மின் இணைப்பு எண்.**234–002–259** மற்றும் அதற்கு சம்மந்தப்பட்ட **5** HP மின்மோட்டார் பம்ப் செட் ஆகியவற்றில் பொதுவில் பேர்பாதி என கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்பது வருவாய் ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**6.12** மேலும் பரமத்தி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட அசல் வழக்கு எண்.**169/05**–ற்கு வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையிலும் மேற்படி கிரையப் பத்திரத்தின் அடிப்படையிலும் மின் இணைப்பு எண்.**234–002–259** மற்றும் அதற்கு சம்மந்தப்பட்ட **5** HP மின்மோட்டார் பம்ப் செட் ஆகியவற்றில் பொதுவில் பேர்பாதி திரு. S.M. சின்னுசாமி, த/பெ

முத்துசாமிகவுண்டர், R. புதுப்பாளையம், ராமதேவம் கிராமம் அவர்களுக்கு பாத்தியப்பட்டுள்ளதால், மின் இணைப்பில் அவர் பெயரும் சேர்க்கப்பட்டுள்ளது என்றும், மனுதாரரின் மேல்முறையீட்டு மனுவினை தள்ளுபடி செய்யுமாறும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு :</u>**

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 புள்ளியண்ண கவுண்டர் மகன் ரங்கசாமி தன்னுடைய தம்பி புள்ளியண்ண கவுண்டர் மகன் காளியண்ணன் என்பவருக்கு விவசாய மின் இணைப்பு வழங்க ஆட்சேபனை இல்லையென்று கடிதம் கொடுத்ததின் பேரில் 12.02.1999–இல் 5hp விவசாய மின் இணைப்பு எண் 234–002–259 (SF No. 423/2A) வழங்கப்பட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். ரங்கசாமி அவர்கள் சர்வே எண் 423/2A–இல் உள்ள நிலம் S.M. சின்னசாமிக்கு 18.06.2002–இல் கிரயம் செய்து மின் இணைப்பு எண் 234–002–259 மற்றும் 5hp மின் மோட்டார் பம்ப்செட்டில் சரிபாதி என்று பத்திரத்தில் எழுதி நல்லூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண் 20/02 பதிவு செய்து கொண்டார்கள் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.3 காளியண்ணன் கவுண்டருக்கு பாத்தியப்பட்ட 2 ஏக்கர் 15 செண்ட் நிலத்தையும், அதில் உள்ள கிணற்றின் மின் இணைப்பு எண் 234–002–259 மற்றும் 5hp மின் மோட்டார் பம்ப் செட் ஆகியவற்றுடன் 26.02.2007–ல் தனது பெயருக்கு பரமத்தி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண் 521/2007–இன் படி கிரயம் செய்து கொண்டதாகவும், 2015– ஆம் ஆண்டு உரிய ஆவணங்கள் சமர்ப்பித்து மேற்படி மின் இணைப்பை தன்னுடைய பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். இந்நிலையில், மின் இணைப்பு எண் 234–002–259–இல் திரு S.M. சின்னுசாமி பெயரை சேர்க்க வேண்டுமென நாமக்கல் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தீர ஆராயாமல் 22.09.2020–இல் ஆணை பிறப்பித்துள்ளதாக தெரிவித்து மேற்படி மின் இணைப்பில் யாருடைய பெயரையும் கூட்டு உரிமையாளராக சேர்க்கக் கூடாதென மேல்முறையீட்டாளர் வேண்டுகிறார்.

7.4 12.02.1999–இல் மின் இணைப்பு எண் 234–002–259 பெறப்படும்போதே கிணற்றின் பங்குதாரர் ரங்கசாமி தனது தம்பி காளியண்ணன் பெயருக்கு மின் இணைப்பு வழங்க ஆட்சேபனை இல்லையென எழுதி கொடுத்துள்ளது உண்மை என்றும், சர்வே எண் 423/2A–இல் உள்ள 2 ஏக்கர் 15 சென்ட் நிலம், அதிலுள்ள கிணறு, விவசாய மின் இணைப்பு எண் 234–002–259 மற்றும் அதற்கு 5hp மின்மோட்டார் பம்ப் செட் ஆகியவற்றில் பாதி காளியண்ணன் என்பவரிடமிருந்து 26.02.2007–இல் ஆவண எண் 521/07 ஆக பரமத்தி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கிரையம் பெற்றது உண்மையென எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.5 2015–ஆம் ஆண்டு உரிய ஆவணங்கள் சமர்ப்பித்ததால் மேற்படி மின் இணைப்பை மேல்முறையீட்டாளர் திரு. R.துரைசாமி பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டதாகவும், 2 ஏக்கர் 15 சென்ட் நிலம், அதிலுள்ள கிணற்றில் உள்ள மின் இணைப்பு எண் 234–002–259, 5hp மின்மோட்டார் பம்ப்செட் ஆகியவற்றுடன் பதிவு செய்யப்பட்ட (ஆவண எண் 52/07) கிரைய பத்திரத்தில் மேற்படி மின் இணைப்பு எண் மற்றும் அதற்கு சம்மந்தப்பட்ட 5hp மின்மோட்டார் ஆகியவற்றில் பொதுவில் பாதி பாத்தியம் என கிரையம் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாக வருவாய் ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.6 சார்பதிவாளர் ஆவண எண் 20/2002–இன் படி சர்வே எண் 423/2A–இல் உள்ள திறந்தவெளி கிணற்றில் உள்ள மின் இணைப்பு எண் 234–002–259 மற்றும் அதற்கு சம்மந்தப்பட்ட 5hp மின்மோட்டார் பம்ப்செட் ஆகியவற்றில் பொதுவில் பேர்பாதி என கிரையம் செய்யப்பட்டுள்ளது வருவாய் ஆவணங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.7 பரமத்தி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் வழக்கு எண் 169/2015–இல் வழங்கப்பட்ட தீர்ப்பில் திரு S.M. சின்னுசாமி பெயரை இணைக்க வாரிய விதிமுறைகளுக்குட்பட்டு இருந்தால் இணைக்கலாமென்ற தீர்ப்பின் அடிப்படையிலும், மேற்படி கிரையப் பத்திரத்தில் மின் இணைப்பு எண் 234–002–259 மற்றும் அதற்கு சம்மந்தப்பட்ட 5hp மின்மோட்டார் பம்ப் செட் ஆகியவற்றில் பொதுவில் பேர்பாதி திரு S.M. சின்னுசாமி அவர்களுக்கு பாத்தியப்பட்டுள்ளதால் மின் இணைப்பில் திரு S.M. சின்னுசாமி பெயரும் சேர்க்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.8 இவ்வழக்கில் எதிர்மனுதாரர் பரமத்தி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் வழக்கு எண் 169/2015–இல் திரு S.M. சின்னுசாமி பெயரை வாரிய விதிமுறைகளுக்குட்பட்டு இருந்தால் இணைக்கலாமென்ற தீர்ப்பின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தெரிவித்துள்ளதால் நான் 24.01.2019 நாளிட்ட நீதிமன்றத்தின் தீர்ப்புரையை கவனத்தில் கொள்ள விழைகிறேன்.

1) எழுவினா–1 – தாவா சொத்து விவரத்தில் கண்ட மின்னிணைப்பு 259ல் வாதியின் பெயருடன் 1ம் பிரதிவாதியையோ, வேறு எவரையுமோ எக்காலத்திலும் கூட்டுதாரர் ஆக 2, 3, 4 பிரதிவாதிகள் இணைக்கக்கூடாது என கோரும் உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா ? என்ற எழுவினாவில் – வாதி தாவா சொத்தில் தனக்கு முழுமையாக உரிமை மூலம் உள்ளது என நிரூபணம் செய்திருக்காத நிலையில் தாவா சொத்தை பொறுத்து எழுவினாவில் கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றே இந்நீதிமன்றம் தீர்மானித்து இவ்வெழுவினா வாதிக்கு எதிராக தீர்வு காணப்படுகிறது என்று தீர்ப்பளித்துள்ளது.

2) எழுவினா–2 – தாவா சொத்தில் மின் இணைப்பு எண் 259 அமைந்துள்ள கிணற்றுக்கு 1–ம் பிரதிவாதிக்கோ அல்லது வேறு எவருக்குமோ 2, 3, 4 பிரதிவாதிகள் ஏதும் இக்காலத்திலோ, எக்காலத்திலோ புதிய மின்னிணைப்பு எதும் வழங்கக் கூடாது என கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா ? என்ற எழுவினாவிற்கு 2ம் பிரதிவாதி தன்னுடைய எதிர்வழக்குரையில் 1ம் பிரதிவாதி மின்னிணைப்பு எண்.259 இல் தன்னையும் கூட்டு பங்குதாரராக பெயர் சேர்க்க வேண்டி 2முதல் 4 பிரதிவாதிகளிடம் விண்ணப்பம் கொடுத்து நாளது வரை பரிசீலணையில் இருந்து வருவதாக குறிப்பிட்டுள்ள நிலையில் மேற்படி 1ம் பிரதிவாதியின் பெயர் மேற்படி 259ல் கூட்டு உரிமையாளராக சேர்க்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி சங்கதி பரிசீலனை செய்யப்பட்டதிலிருந்து 1 ஆம் பிரதிவாதியின் விண்ணப்பம் முறையாக பரிசீலனை செய்யப்பட்டு மின்வாரிய விதிகளுக்குட்பட்டு நடவடிக்கை எடுக்கப்படவேண்டியது முறையானது என்று தீர்மானிக்கப்பட்டு வாதிக்கு எதிராக தீர்வு காணப்படுகிறது என தீர்வுசெய்யப்பட்டுள்ளது.

3) எழுவினா–3 – வாதிக்கு கிடைக்கக் கூடிய இதர பரிகாரம் என்ன என்ற எழுவினாவிற்கு வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு

ஆராய்கின்றபோது வாதிக்கு வேறு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்று முடிவு செய்யப்பட்டு தாவா முழுமையாக தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

7.9 மேற்கண்ட தீர்ப்புரையை ஆராயும்பொழுது தாங்கள் மின்குறைதீர் மன்றத்தில் கோரிய பரிகாரத்திற்கு பரமத்தி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் தங்களுக்கு எதிராக தீர்ப்பு வழங்கியுள்ளது. எனவே, இது சம்பந்தமாக நான் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி 17(4)ஐ ஆராய விரும்புகிறேன். மேற்கண்ட விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"xxx xxx xxx*

*17 (4) கீழ்க்குறிப்பிட்டவற்றை பின்பற்றினாலொழிய எந்த முறையீடும், மின்சாரகுறைதீர்ப்பாளரால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.*

*அ) முறையீட்டாளர், மின்சார குறைதீர்ப்பாளருக்கு முறையீடு செய்வதற்கு முன், முறையீட்டில் குறிப்பிட்ட உரிமம்தாரர், கறைகளை மன்றத்தில் எழுத்து மூலம் முறையீடு செதிருந்து அந்த முறையீட்டை மன்றம் தள்ளுபடி செய்திருக்க வேண்டும். அல்லது முறையீடு பதிவு செய்த ஐம்பது நாட்களுக்குள் பதில் பெறப்படாமல் இருந்திருக்கவேண்டும் அல்லது முறையீட்டாளருக்கு மன்றம் அளித்த பதிலில் திருப்திஏற்படாமல் இருந்திருக்க வேண்டும். பிரிவு 17 (1) இல் விவரிக்கப்பட்டுள்ள பொதுத்தன்மையான முறையீட்டிற்கு இது பொருந்தாது.*

*ஆ) முறையீடு, முறையீட்டிற்கான நிகழ்வு நடந்த மூன்று மாதங்களுக்குள் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.*

*இ) பெறப்படும் முறையீடு தீர்க்கப்படாத ஒன்றாக இருத்தல் வேண்டும். மின்சார குறைதீர்ப்பாளரால் முந்திய விசாரணை நடவடிக்கைகள் மூலமாக தீர்க்கப்பட்ட நுதல் பொருள் (subject matter) கொண்ட முறையீடு, அதே முறையீட்டாளரிடமிருந்து தனியாகவோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட முறையீட்டாளர்களுடன் சேர்ந்தோ அல்லது எத்தரப்பினரிடமிருந்து வந்தாலும், ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.*

*ஈ) முறையீட்டின் குறிப்பிட்ட புகார் ஏதாவது நீதி மன்ற நடவடிக்கையில் நிலுவையில் இருந்தாலோ அல்லது அப்பொருள் மீது தக்க அதிகாரம் பெற்ற நீதிமன்றம் ஏற்கனவே கட்டளையோ, தீர்ப்போ அல்லது இறுதியாணையோ வழங்கியிருந்தாலோ, அவ்வாறான புகார் கொண்ட முறையீடாக இருக்கக் கூடாது.*

*உ) முறையீடு அற்பமானதாகவும் எரிச்சல் தரக்கூடியதாகவும் இருக்கக் கூடாது."*

7.10 மேற்கண்ட விதி 17(4)(ஈ)ஐ கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது, மின்குறைதீர்ப்பாளரின் முன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள புகார் ஏதாவது நீதிமன்ற நடவடிக்கையில்

நிலுவையிலிருந்தாலோ அல்லது அப்பொருள் மீது தக்க அதிகாரம் உடைய நீதிமன்றம் ஏற்கனவே கட்டளையோ, தீர்ப்போ அல்லது இறுதி ஆணையோ வழங்கியிருந்தாலோ அத்தகைய முறையீட்டினை மின்சார குறைதீர்ப்பாளர் ஏற்றுக்கொண்டு தீர்வு வழங்க முடியாது என்று தெரிகிறது.

7.11 தற்பொழுது இந்த மேல்முறையீட்டு மனுவிலும் மின் இணைப்பு எண் 234–002–259இல் வேறு யாருடைய பெயரையும் கூட்டு உரிமையாளராக சேர்க்கக் கூடாது என்றே கோரியுள்ளீர்கள். இதுசம்பந்தமாக பரமத்தி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் வழக்கு எண் 169/2015–இல் தங்களின் கோரிக்கைக்கு எதிராக தீர்வு கண்டுள்ள நிலையில் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி 17(4)(ஈ) இன் படி தங்களுடைய மேல்முறையீடு சம்பந்தமாக தீர்வு எதுவும் வழங்க அதிகார வரம்பில்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

## 8.0 முடிவுரை:

8.1 பத்தி 7–இல் உள்ள தீர்வின்படி மேல்முறையீட்டாளரின் மேல்முறையீட்டு மனுவில் மின் இணைப்பு எண் 234–002–259 இல் வேறு யாருடைய பெயரையும் கூட்டு உரிமையாளராக சேர்க்கக் கூடாது என்ற கோரிக்கை சம்பந்தமாக பரமத்தி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் வழக்கு எண் 169/2015–இல் மேல்முறையீட்டாளருக்கு எதிராக தீர்வு கண்டுள்ள நிலையில் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி 17(4)(ஈ) இன் படி மேல்முறையீடு சம்பந்தமாக தீர்வு எதுவும் வழங்க இயலாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

8.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 18/2021 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ. தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

''நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை''
**"No Consumer, No Utility"**

பெறுநர்
1. திரு. ஆர். துரைசாமி, – BY RPAD
த/பெ. ராமசாமி,
ஆர் புதுப்பாளையம்,
ராமதேவம் கிராமம் & அஞ்சல்,
பரமத்தி வேலூர் வட்டம், நாமக்கல் மாவட்டம்.

2.  செயற்பொறியாளர்/பரமத்தி வேலூர்,
நாமக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பழைய பைபாஸ் ரோடு, அபிராமி தியேட்டர் அருகில்,
பரமத்தி வேலுர் – 638 182.

3. மேற்பார்வை பொறியாளர், – By Email
நாமக்கல்  மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
ஜெய் சூர்யா டிபார்ட்மெண்டல் ஸ்டோர்ஸ் எதிரில்,
திருச்செங்கோடு ரோடு, நாமக்கல் – 637 001.

6.  தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8.  உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.